بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 7.11.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 7, November 2014 (Tamil)

## பொருள் தியாகம் : தஹ்ரீகே ஜதீத் 2014

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரத் அந் நமலின் 63 வது வசனத்தை ஓதி அதன் பொருளையும் கூறினார்கள்:–

لَن تَنَالُواْ ٱلۡبِرَّ حَتَّىٰ تُنفِقُواْ مِمَّا تُحِبُّونَۚ وَمَا تُنفِقُواْ مِن شَيۡءٖ فَإِنَّ ٱللَّهَ بِهِۦ عَلِيمٞ ﴿٩٢﴾

பொருள்: நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து (இறைவனுக்காகச்) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினை பெற முடியாது. நீங்கள் எப்பொருளை செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இது தொடர்பாக இதனை விளக்கியவாறு கூறுகின்றார்கள். அதாவது உலகில் மனிதன் செல்வத்தை அதிகமாக நேசிக்கின்றான். எனவே தான் இல்மே தஃபீருர் ரோயா (கனவுகளுக்கான விளக்கம்) வில், ஒருவர் தன்னுடைய இதயத்தை எடுத்து வேறொருவருக்கு கொடுப்பதாக கனவில் கண்டால் அதன் பொருள் செல்வமாகும். இந்த காரணத்தினால் தான் உண்மையான இறையச்சம் மற்றும் ஈமானைப் பெறுவதற்கு لَن تَنَالُواْ ٱلۡبِرَّ حَتَّىٰ تُنفِقُواْ مِمَّا تُحِبُّونَۚ அதாவது எதுவரை உங்களுடைய மிக விருப்பமான பொருள்களை செலவு செய்யமாட்டீர்களோ அதுவரை உண்மையான நன்மையினை ஒருபோதும் பெற முடியாது என்று கூறுகின்றான். ஏனென்றால், படைப்பினத்தோடு கருணையுடன் நடந்து கொள்வதின் ஒரு மிகப் பெரிய பகுதி செவத்தை செலவு செய்வதன் அவசியத்தை கூறுகின்றது. மேலும் மனித குலம் மற்றும் இறைவனின் படைப்பினங்களின் மீது கருணை எப்படிப்பட்ட ஒன்றென்றால் அது ஈமானின் இன்னொரு அங்கமாகும். அது இல்லாமல் ஈமான் முழுமை மற்றும் உறுதி பெற முடியாது. எதுவரை மனிதன் தியாகம் செய்வதில்லையோ மற்றவருக்கு எவ்வாறு பயனளிக்க முடியும்? பிறருக்கு பயனளிப்பது மற்றும் கருணை காட்டுவதற்கு தியாகம் அவசியமான ஒன்றாகும். மேலும் இந்த வசனம் لَن تَنَالُواْ ٱلۡبِرَّ حَتَّىٰ تُنفِقُواْ مِمَّا تُحِبُّونَۚ ல், இதே தியாகத்தினுடைய போதனை மற்றும் வழிகாட்டல் பற்றி கூறப்பட்டுள்ளது.

எனவே செல்வத்தை இறைவழியில் செலவிடுவதும் மனிதனுடைய நற்பேறு மற்றும் இறையச்சத்தின் உயர் தரமாகும். அபூபக்கர் (ரலி) அவர்களின் வாழ்க்கையில் இறைவனுக்காக அர்ப்பணித்தலின் தரம் எவ்வாறு இருந்ததென்றால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தேவையை கூறிய போது வீட்டினுடைய அனைத்து பொருள்களையும் கொண்டு வந்து விட்டார்கள்.

அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை வழங்கி நம்மீது கருணை காட்டியுள்ளான். அன்னார் எங்கு அல்லாஹ்வினுடைய கட்டளைக்கு ஏற்பவும் மற்றும் அவன் வழங்கிய போதனைகளுக்கு ஏற்பவும் நம்முடைய கொள்கை மற்றும் செயல் அளவிளான சீர்திருத்தம் செய்கின்ற அதே வேளையில் ஆன்மீக முன்னேற்றம் மற்றும் தூய்மையடைதலுக்கும் திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்ப வழிமுறைகளைக் கற்றுத் தந்தார்கள். இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளின் பக்கமும் கவனமூட்டினார்கள். மேலும் இறையடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமையின் பக்கமும் கவனமூட்டினார்கள். உயிர், பொருள், காலம் மற்றும் சந்ததிகளை இறைவனுடைய விருப்பத்தினை பெறுவதற்காக தியாகம் செய்யும் ஆன்மாவையும் உருவாக்கினார்கள். தன்னுடைய ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரிடமும் அவர் தன்னுடைய நிலைமையை முழுமையான முறையில் இறைவனுடைய போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். அப்போது தான் அவர் உண்மையான அஹ்மதி என்று கூறப்படுவார். எனவே நாம் நமது வாழ்க்கைகளை அன்னாருடைய எதிர்பார்ப்பு மற்றும் விருப்பத்திற்கேற்ப அமைக்க முயற்சி செய்ய வேண்டும். நான் படித்த இந்த மேற்கோள் நான் ஆரம்பித்தில் ஓதிய திருக்குர்ஆன் வசனத்தின் விளக்கமாகும். நான் கூறியது போன்று இதில் அல்லாஹ் நம்மை நமது ஆன்மீக முன்னேற்றத்திற்காக, ஒரு நம்பிக்கையாளரின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டுகிறான். அதில் ஒரு பொறுப்பின் பக்கம் அதாவது பொருள் தியாகம். எனவே இதுவொரு விரிவான தலைப்பாகும். ஆனால் இப்போது பொருள் தியாகம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று அதாவது செல்வத்தை தியாகம் செய்வதும் அல்லாஹ்வின் அடியார்களுடைய உரிமையை செலுத்துவதற்கான ஒரு மாபெரும் வழியாகும். எனவே இந்த அடிப்படையில் பொருள் தியாகம் தொடர்பாக நான் கூறுவேன். இறையடியாரகளுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்கும் மார்க்கத்தை பரப்புவதற்கான பணிக்கும் பொருள் தியாகத்தின் அவசியம் இருக்கின்றது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோளின் சாராம்சமாகும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் இந்த பணி தனது உச்சத்தை அடைந்திருந்தது. இன்று இந்த பணியை முழுமை செய்வதில் பங்கெடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்களில் அடங்குவோம். அதன் மூலமாக நாம் அல்லாஹ்வினுடைய விருப்பத்தை பெறக்கூடியவர்களாக ஆக வேண்டும். இன்று உலகம் பொருள் ஆசையில் என்ன செய்து கொண்டிருக்கிறது என்றே தெரியவில்லை. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனை மற்றும் தர்பியத்தின் விளைவாக அஹ்மதிய்யத்தின் பெரும் எண்ணிக்கை, அதிகமானோர் அல்லாஹ்வினுடைய விருப்பத்தை பெறுவதற்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தைப் பரப்புவதற்காக தனது விருப்பத்திற்குரிய பொருளை செலவிடுகின்றனர். மேலும் ஏதேனும் ஒரு காரணத்தினால் செலவிடுகின்ற நற்பாக்கயத்தில் குறைவு ஏற்பட்டால் நிம்மதி இழந்து விடுகின்றனர். அழுகின்றனர். ஆக, இதுவே ஜமாஅத் உறுப்பினர்களின் ஆன்மா ஆகும். பொருள் தியாயத்தின் முக்கியத்துவம் என்ன ? பணிகள் என்ன? என்று மக்களுக்கு தெளிவாகிவிட்டால் பிறகு எந்நேரமும் அவர்கள் தியாகம் செய்வதற்கு தயாராக இருக்கின்றனர். எனவே பனவீனம் இருக்கின்றதென்றால் அமைப்பில் பலவீனம் இருக்கின்றது. அல்லாஹ்வின் அருளால் மக்களின் ஈமானில் எவ்வித பலவீனமும் இல்லை. இந்த காலத்திலும் அல்லாஹ் எவ்வாறு மக்களின் உள்ளங்களில் தியாத்தினுடைய ஆன்மாவை உருவாக்குவதற்கான ஏற்பாட்டை செய்கின்றான் என்பது தொடர்பான ஒரு சில சம்பவங்களை எடுத்துக் கூறுவேன்.

பெனினின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். போர்த்தோவினுடைய ஒரு புகழ் பெற்ற அஹ்மதி மஷ்ஹூதி சாஹிப் 1000 பவுண்டை விட அதிகமாக தியாகம் செய்துள்ளார்கள். இப்போது ஆப்ரிக்காவின் நாடுகளில் இவ்வளவு பெரிய தியாகம் மிகப் பெரிய ஒன்றாகும். எப்போது முபல்லிக் சாஹிப் அவர்கள் நீங்கள் இவ்வளவு ஏன் கொடுக்கின்றீர்கள்? வக்ஃபே ஜதீதின் சந்தாவும் உள்ளது. மேலும் பிற சந்தாக்களும் உள்ளது என்று கூறிய போது அவர் கூறினார். நிச்சயமாக இருக்கும். ஆனால் இதில் நான் குறைக்க மாட்டேன். அல்லாஹ் அதற்கு வேறு விதமான ஏற்பாட்டைச் செய்வான். ஆக, இதுவே மக்களில் உருவாகக்கூடிய ஆன்மாவாகும். பிறகு பெனினிலிருந்து நமது முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்.

சாவே ரீஜனின் ஒரு புதிய ஜமாஅத் பீலில் தர்பிய்யத் கூட்டம் நடத்தப்பட்டது. தஹ்ரீகே ஜதீதின் வரலாற்றுப் பிண்ணனி எடுத்துக் கூறப்பட்டது. மேலும் பொருள் தியாகம் தொடர்பாக கவனமூட்டப்பட்டது. கூட்டத்தின் முடிவில் நண்பர்கள் தத்தமது சந்தாக்களை கொடுத்தார்கள். ஒரு நண்பர் என்னிடம் பணம் இல்லை. ஆனால் சந்தா கொடுக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது என்று கூறினார். இதற்கு அங்குள்ள உள்ளூர் முபல்லிக் சாஹிப் அவர்கள் நீங்கள் உங்களுடைய தகுதிக்கேற்ப உங்களிடமுள்ளதை கொடுங்கள் என்று வழிகாட்டினார்கள். உடனே அந்த நபர் சென்றார். மிகவும் ஏழையாக இருந்தார். வீட்டிலிருந்து கோழியின் இரு முட்டைகளை கொண்டு வந்து தற்சமயம் என்னிடம் இவைகள் தான் இருக்கின்றது என்று கூறினார். அப்போது அவருக்கும் ஜமாஅத்திற்கும் இது இவரின் தகுதிக்கேற்ப மிகப்பெரிய தியாகமாகும். மேலும் இறைவனுடைய பார்வையில் எந்த தியாகமும் சிறியதல்ல. எண்ணம் மட்டும் நல்லதாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. பிறகு மாலியினுடைய ஒரு அறிக்கை உள்ளது.

அபூபக்கர் ஜரா சாஹிப் ஏதேனும் காரணத்தால் சந்தா கொடுப்பதை விட்டு விட்டார். மேலும் மெதுமெதுவாக ஜமாஅத்தினுடைய நிகழ்ச்சிகளில் வருவதையும் நிறுத்தி விட்டார். இதுபற்றி அவருக்கு போதுமான அளவிற்கு புரிய வைக்கப்பட்டது. ஆனால் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஒரு காலத்திற்குப் பிறகு அவர் ஒரு நாள் மிஷனுக்கு வந்தார். மேலும் தன்னுடைய சந்தாவை செலுத்தினார். மேலும் இன்று அவர் ஒரு கனவு பார்த்தார். அதாவது அவர் மிக ஆழமான தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கிறார். அவரது உதவிக்கு எவரும் வரவில்லை. அப்போது ஒரு கப்பலை அவர் காண்கின்றார். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இருக்கின்றார்கள். ஹுஸுர் அவர்கள் அவரது கையைப் பிடித்து கப்பலில் தன்னோடு அமர்த்தினார்கள். மேலும் இனிமேல் ஒருபோது சந்தா கொடுப்பதில் சோம்பேறித்தனம் காட்ட வேண்டாம் என்று கூறினார்கள். இந்த கனவிற்குப் பிறகு அவர் இனிமேல் ஒருபோதும் சந்தா கொடுப்பதில் சோம்பேறித்தனம் காட்ட மாட்டார் என்றும் மேலும் ஜமாஅத் பணிகளில் கவனக்குறைவு காட்ட மாட்டார் என்றும் ஜமாஅத்திடம் உறுதியான வாக்குறுதி அளித்தார்.

ஆக, எங்கு இதில் சந்தாவினுடைய முக்கியத்துவம் புலனாகின்றதோ அதே வேளையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)அவர்களுடைய உண்மைக்கும் சான்றாக உள்ளது. அதாவது தொலைத்தூரத்திலுள்ள ஒரு நாட்டில் மேலும் அந்த நாட்டிலும் ஒரு தொலைத்தூரப் பகுதியில் ஒரு நபர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்கிறார். பிறகு பின்வாங்கி விடுகிறார். பிறகு அவருக்கு கனவு மூலமாக வழிகாட்டப்படுகிறது.

தாருஸ் ஸலாம் தன்ஸானியாவினுடைய ஒரு அஹ்மதி நண்பர் ஈஸா சாஹிப் கூறுகின்றார்கள். அவர்கள் 90களில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதற்கு முன்பு அவர் கிறித்தவ மார்க்கத்தோடு தொடர்புடையவராக இருந்தார். ஆனால் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு போதிய அளவு முன்னேறினார். அல்லது முன்னேற்றம் கண்டார். மேலும்

இப்போது வஸிய்யத் செய்தவாராவார். மேலும் பொருள் தியாகம் செய்யக்கூடியவராவார். மேலும் எப்போதும் தன்னுடைய மற்றும் தன்னுடைய குடும்பத்தின் சந்தாவை வாக்குறுதியை விட அதிகமாக செலுத்துகிறார். ஜமாஅத்தின் போதனைகளுக்கு ஏற்ப நடப்பதில் பழைய அஹ்மதிகளை விட முன்நிற்கின்றார். அல்லாஹ்வின் அருளால் தாருஸ் ஸலாம் தன்ஸானியாவின் ரீஜினல் தலைவருமாவார். கூறுகிறார்கள். எப்போதிருந்து அல்லாஹ்வின் வழியில் தியாகங்கள் செய்ய ஆரம்பித்தார்களோ அல்லாஹ்வினுடைய அதிகமான அருட்கள் தன்மீது இறங்குவதை கண்டாதக் கூறுகின்றார். இதே போன்று அலாடா ரீஜனின் முபல்லிக் சாஹிப் கூறுகிறார்கள். ஒரு முறை சோயோ ஜமாஅத்திற்குச் சுற்றுப் பயணம் செய்தோம். பாருங்கள். ஒரு 7 வயது சிறுமியின் உள்ளத்திலும் கூட போடுகிறான். ராஷிதா தக்காளி, மிளகாய் போன்றவற்றை கொண்டு வந்து இவைகள் அனைத்தையும் தஹ்ரீகே ஜதீத் சந்தாவற்காக கொண்டு வந்துள்ளேன் என்று கூறியது. அந்தச் சிறுமி ஒவ்வொரு மாதமும் தனது சந்தாவை கொடுக்கின்றாள். அவளுடைய தாய் சந்தா கொடுப்பதற்காக பணம் கொடுக்கவில்லை என்றால் அழுகின்றாள் என்று அங்குள்ள சதர் சாஹிப் கூறினார்கள்.

நைஜீரியாவின் ஒக்கீனே ஜமாஅத்தின் சதர் சாஹிப் கூறுகின்றார்கள். இந்த எளியவன் சில காலமாக பொருளாதார கஷ்டத்திற்கு ஆளாகியிருந்தேன். அதன் காரணமாக அதிகமான கஷ்டத்தில் இருந்தேன். பிறகு ஒரு நாள் நான் மூன்று மாதமாக சந்தா கொடுக்கவில்லை. இதனால் தான் என்னமோ நான் இந்த பொருளாதார கஷ்டத்தில் சிக்கியுள்ளேனோ? என்ற எண்ணம் எனக்கு வந்தது. எனவே மூன்று மாதத்திற்குப் பிறகு 4000 நய்ஜர் சந்தா கொடுத்தேன். இறைவனுடைய செயல் எவ்வாறு இருந்ததென்றால் அதே மாதத்தில் நான் ஒரு நிலத்தின் ஒரு பகுதியை விற்றேன். அதில் என்னுடைய இறைவன் எனக்கு 8 லட்சம் நய்ஜர் லாபத்தை வழங்கினான். அப்போது என்னுடைய ஈமானும்கு உறுதி கிடைத்த அதே வேலையில் இறைவனுடைய தன்னுடைய வாக்குறுதியில் உண்மையானவனாவான். அவனுடைய வழியில் தியாகம் செய்தால் நிச்சயமாக அவன் பல மடங்கு உனக்குத் திருப்பித் தருவான் என்ற விஷயமும் புரிய வந்தது. இப்போது அவர் பள்ளிவாசல் மற்றும் மிஷன் ஹவுஸிர்காக ஒரு பிளாட்டையும் நகரப் பகுதியில் வாங்கிக் கொடுத்துள்ளார்.

தன்ஸானியாவிலிருந்து ஒரு அஹ்மதி மாருன்டா சாஹிப் கூறுகிறார்கள். என்னுடைய கல்வித் தகுதி மெட்ரிக் ஆகும். ஒரு நீண்ட காலமாக வேலையில்லாமல் இருந்தேன். எனக்கு ஒரு கேஸ் கம்பெனியில் செக்கியூரிட்டி கார்ட்டாக வேலை கிடைத்தது. 56,000 ஷிலின்ங் சம்பளம் நியமிக்கப்பட்டது. அப்போது நான் இறைவனிடம் என்னுடைய சம்பள்ளதிற்கு ஏற்ப சந்தாக்களை விகிதாச்சார அடிப்படையில் கொடுப்பேன். எனக்கு எப்படிப்பட்ட கஷ்டங்கள் வந்தாலும் சந்தாவில் சோம்பேறித்தனம் காட்ட மாட்டேன் என உறுதிமொழி எடுத்தக் கொண்டேன். அவ்வாறு அந்த இளைஞர் தனது உறுதிமொழியையும் நிறைவேற்றினார். கூறுகின்றார்கள். நான் இன்று அல்லாஹ்வின் அருளால் அந்த பொருள் தியாகத்தின் காரணமாக அந்த கேஸ் கம்பெனியில் சீனியர் ஃபீல்ட் கேஸ் ஆபடேரட்டர் பதவியில் இருக்கின்றேன். மேலும் எனக்கு 1.5 மில்லியன் ஷிலின்ங் சம்பளம் கிடைக்கின்றது. என்னுடைய கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி மட்டும் தான். கம்பெனியின் சட்டத்திற்கு ஏற்ப நான் அந்த பதவிக்கு தகுதியானவனும் அல்ல. ஆனால் முழுக்க முழுக்க இறைவனின் அருளால் விகிதாச்சார அடிப்படையில் பொருள் தியாகம் செய்ததின் அருளால் நான் இந்த பதவியில் உள்ளேன். மேலும் இன்றும் விகிதாச்சார அடிப்படையில் சந்தா கொடுத்து வருகின்றேன். ஆக, இந்த மக்கள் தூய்மை மற்றும் விசுவாசத்தில் முன்னேறுகின்றனர். மேலும் வ அன்ஃபிகூ கைரன் லி அன்ஃபுஸிகும் அதாவது செல்வத்தை

அவனது வழியில் செலவிடுவது உங்களுக்கு அது சிறந்ததாகும் என்ற இந்த கருத்தை புரியக் கூடியவர்கள் ஆவார்கள். இந்த மக்கள் இந்த ரகசியத்தை புரியக் கூடியவர்கள் ஆவார்கள். பிறகு அல்லாஹ் அவர்களுக்கு அருளவும் செய்கின்றான்.

இந்தியாவின் ஒரு தஹ்ரீகே ஜதீத் இன்ஸ்பெக்டர் ஷஹாபுத்தீன் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். ஒரு நபர் அவர் ஜட்சர்லாவினுடைய ஸப்ஃபே அவ்வலின் முஜாஹித் ஆவார். அவருடைய வியாபாரம் பின்தங்கியது. ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வந்தார். பல மாதங்களாக கஷ்டத்தில் இருந்து வந்தார். மேலும் ஃபோன் செய்து சந்தாவை நிறைவேற்றுவதற்காக துஆவிற்காக விண்ணப்பித்து வந்தார். எனக்கும் அவர் கடிதம் எழுதினார். ஒரு நாள் இரவு அவரது ஃபோன் வந்தது. அப்போது நீங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையுங்கள். நஃபில் தொழுதுவிட்டு தூங்குங்கள் என்று கூறினார். சிறிது நேரத்திற்குப் பிறகு மீண்டும் ஃபோன் வந்தது. எனக்காக சற்று நேரம் விழித்திருங்கள். நான் உங்களை சந்திப்பதற்காக வருகின்றேன் என்று கூறினார். அவர் வந்த போது அவருடைய கையில் ஒரு மிகப் பெரிய தொகை இருந்தது. நான் துஆ செய்த போது ஒரு நபர் அவர் பெரிய அளவில் வியாபாரம் செய்பவர். அவர் எனக்கு ஒரு மிகப் பெரிய தொகையை தரவேண்டியது இருந்தது. அது கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு முற்றிலும் இருந்ததில்லை. அவர் எனக்கு ஃபோன் செய்து உடனடியாக வந்து உங்களது பணத்தை பெற்றுச் செல்லுங்கள் என்று கூறியதாக கூறினார். ஆக, என்னுடைய எண்ணம் சந்தா கொடுக்க வேண்டும் என்று இருந்ததினால் அல்லாஹ் உடனடியாக அதற்குரிய ஏற்பாட்டைச் செய்து விட்டான் என்று கூறுகிறார்.

இதே போல் பஷீருத்தீன் சாஹிப் நாயிப் வகீலுல் மால் காதியான் கூறுகிறார்கள். ஜமாஅத்தினுடைய ஒரு தூய நண்பர் இரண்டரை மடங்கு தன்னுடைய வாக்குறுதியை அதிகமாக எழுதினார். பிறகு தன்னுடைய அலுவலகத்திற்கு கிளம்பி விட்டார். அங்கு சென்ற சில நேரத்திற்குப் பிறகு செகரட்டரி சாஹிப் தஹ்ரீகே ஜதீதிற்கு ஃபோன் செய்து நான் வாக்குறுதி எழுதிவிட்டு பள்ளியிலிருந்து வெளியே வந்ததுமே எனக்கு என்னுடைய தொழிலில் மேலுல் லாபம் கிடைக்கப் போவதாக செய்தி கிடைத்துள்ளது. எனவே இது நிச்சயமாக முழுக்க முழுக்க தஹ்ரீகே ஜதீதின் அருளாலேயே ஆகும். எனவே நீங்கள் என்னுடைய வாக்குறுதியை இரு மடங்காக்குங்கள் என்று கூறினார். இரண்டரை மடங்கு ஏற்கனவே அவர் அதிகமாக்கியிருந்தார். இப்போது அதையும் இரு மடங்காக ஆக்கிவிட்டார். அல்லாஹ்வின் அருளால் அதை முழுமையாக செலுத்தியும் விட்டார்.

இதே போன்று கேரளா இந்தியாவினுடைய முரப்பி சாஹிப் எழுதுகின்றார்கள். ஒரு ஜமாஅத்தினுடைய தூய நண்பர் கடந்த ஆண்டு தன்னுடைய தஹ்ரீகே ஜதீத் சந்தாவை இரு மடங்கு அதிகமாக செலுத்தி இருந்தார். மேலும் இவ்வாண்டும் அல்லாஹ்வின் அருளால் அசாத்தியமான அதிகரித்தலோடு சந்தாவை வழங்கியுள்ளார். அவர் கூறுகிறார். அவர் 7 வருடத்திற்கு முன் 30,000 ரூபாயில் மூன்று கூலி ஆட்களோடு தன்னுடைய பணியை தொடங்கினார். ஆனால் இப்போது அல்லாஹ்வின் அருளால் எனக்கு இந்தியா, துபாய், இன்டோனேஷியா வில் Rubber Wood Furniture உடைய 8 தொழிற்சாலைகள் உள்ளன. அதில் 500 க்கும் அதிகமானோர் பணியாற்றுகின்றனர். நீங்கள் பார்க்கின்ற இந்த முன்னேற்றம் முழுக்க முழுக்க சந்தாவை விகிதாச்சார அடிப்படையில் கொடுத்ததேயாகும். மேலும் கூறுகிறார். எப்போதெல்லாம் நான் சந்தாவை வழங்குகிறேனோ இறைவன் எனக்கு மாலைக்குள் அதை விட அதிகமாக வழங்கி விடுகின்றான். மேலும் ஒருபோதும் பொருள் கஷ்டம் என்ற கேள்விக்கே இடமில்லை. மேலும் உணரவுமில்லை.

அமீர் சாஹிப் லாஹுர் எழுதுகின்றார்கள். இதுபோன்று நமது பெண்களும் எவ்வாறு தியாகங்கள் செய்கின்றனர். ஒரு பெண்மணி தனது காதுகளின் கம்மல்களை தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் கொடுத்தார்கள். அல்லாஹ் அவர்களது செல்வத்தில் அருள் புரிவானாக. அவர்களது தியாகத்தை ஏற்றுக் கொள்வானாக.

ஜெர்மனி ஜமாஅத்தின் நேஷனல் செகரட்டரி தஹ்ரீகே ஜதீத் கூறுகின்றார்கள். ஒரு கடன்பட்ட நண்பருடைய சம்பவத்தை எழுதுகின்றார். அதாவது அவர் தஹ்ரீகே ஜதீதில் குறிப்பான வாக்குறுதி வழங்கினார். மேலும் அல்லாஹ் அவருடைய வருமானத்தை எந்த அளவிற்கு அதிகமாக்கினான் என்றால் கடனும் அடைபட்டு விட்டது. மேலும் அவருக்கு புதிய வீடு கட்டுவதற்கான நல்வாய்ப்பையும் அல்லாஹ் வழங்கினான். அது வெளிப்படையாக அவருக்கு சாத்தியமற்றதாக இருந்தது.

சுட்சர்லாந்திலிருந்து முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் எழுதுகின்றார்கள். நமது ஒரு பேத்தம் ரெட் ஜீபி சாஹிப் மக்தூனியன் சுவிஸ் ஆவார். கடந்த வருடம் அக்டோபர் மாதம் பைஅத் செய்திருந்தார். தஹ்ரீகே ஜதீத் ஆண்டு முடிவடைவதற்கு 5 நாட்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. மேலும் ஜமாஅத்தில் இணைந்த உடனேயே அவர் 1000 சுவிஸ் பிரான்க் தொகையை வாக்குறுதி இல்லாமல் தஹ்ரீகே ஜதீதில் கொடுத்து விட்டார். மேலும் அடுத்த ஆண்டிற்காகவும் 1000 வாக்குறுதி எழுதினார். பிறகு நடப்பு ஆண்டில் அவருக்கு பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் தெரிய வந்ததும் தனது வாக்குறுதியை இரு மடங்காக்கிவிட்டார். தஹ்ரீகே ஜதீதோடு வக்ஃபே ஜதீதோடு தன்னுடைய வாக்குறுதிய 2000 பிரான்காக எழுதினார். அவர் எந்த கம்பெனியில் பணியாற்றுகிறாரோ அது அவருக்கு எப்படிப்பட்ட ஒரு படிப்பிற்கான வாய்ப்பு வழங்கியிருக்கிறது என்றால் அது மிகவும் விலை உயர்ந்ததாகும். இந்த கம்பெனி பொதுவாக எவர்களுக்கு அதிக அனுபவம் இருக்குமோ மேலும் எவர்கள் வயது 35 ஐ விட அதிகமாக இருக்குமோ அந்த பணியாளர்களைத் தான் படிக்க வைக்கின்றது. அவர் கூறுகிறார். என்று வயது 23 ஆகும். நான் அந்த படிப்பு தொடர்பாக சிந்தித்துக் கூட பார்த்தது கிடையாது. ஆனால் கம்பெனி தானாகவே இந்த படிப்பிற்கான வாய்ப்பை வழங்கியது. இது நிச்சயமாக அல்லாஹ் எனக்கு வழங்கிய பொருள் தியாகத்தின் கனியாகும்.

ஆக, இவ்வாறு புதிதாக வரக்கூடியவர்கள் ஐரோப்பாவிலும் கூட அல்லாஹ் இவ்வாறு தன்னுடைய இருப்பிற்காக நம்பிக்கையை ஊட்டுகின்றான். இதேபோல் ஒரு மெக்தோனியன் சுவிஸ் அஹ்மதி பெக்கம் சாஹிப் கூறுகிறார்கள். நான் பணியாற்றுகின்ற கம்பெனியின் உரிமையாளர் மிகவும் கருமியும் குறுகிய உள்ளம் உடைய மனிதருமாவார். எவ்வித வெளிப்படையான காரணமுமின்றி என்னுடைய சம்பளத்தை உயர்த்தினார். இது முழுக்க முழுக்க பொருள் தியாகத்தின் விளைவேயாகும் என்றே நான் கருதுகின்றேன்.

லண்டனினுடைய ரீஜினல் அமீர் நஸீருத்தீன் சாஹிப் தன்னுடைய ஒரு நண்பரின் சம்பவத்தை எழுதுகின்றார்கள். அந்த அஹ்மதி நண்பர் கூறினார். சந்தா தஹ்ரீகே ஜதீதில் எனக்கு உதவி புரிவாயாக என்று அல்லாஹ்விடம் அதிகமாக துஆ செய்தார். அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அலுவலகம் செல்லும் போது ரயிலில் செல்வதற்குப் பகரமாக பஸ்ஸில் பயணம் செய்ய வேண்டும். இதனால் எனக்கு இலவசமாக பயணம் செய்யக்கூடிய வசதி கிடைக்கும். மேலும் போதுமான அளவு சேமிக்கவும் முடியும் என்ற எண்ணம் எனது உள்ளத்தில் போடப்பட்டது. இதுபோன்று தினசரி இரண்டு பவுண்டுகள் மிஞ்ச ஆரம்பித்தது. மேலும் வருடம் முழுவதும் இவ்வாறே செய்து வந்தார். 400 பவுண்டுகள் சேமிப்பானது. அதை தஹ்ரீகே ஜதீத் சந்தவாக கொடுத்தார். மக்கள் இவ்வாறும் சிந்திக்கின்றனர். ஒருவரின் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டது.

வீட்டினுடைய அனைத்து பொருளையும் கொள்ளையடித்து விட்டார்கள். இங்கு லண்டனில் தான். ஆனால் தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்காக வைத்திருந்த 1000 பவுண்ட் மட்டும் பாதுகாப்பாக இருந்தது.

இதே போல் ஆஸ்திரேலியாவின் மிஷனரி இன்சார்ஜ் சாஹிப் எழுதுகின்றார்கள். கடந்த நாட்களில் அங்கு குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமா இருந்தது. நான் தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக கவனமூட்டினேன். அங்கு குத்தாம் மற்றும் அத்ஃபால்களுக்கு வவ்ச்சர்ஸ் வடிவில் படிசுகள் வழங்கப்பட்டன. ஒரு சிறுவன் அர்ஸலான் மற்றும் ஆத்திஃப் மற்றும் காம்ரான் இந்த மூன்று அத்ஃபால்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுக்கு 89 டாலர் வவ்ச்சர் பரிசாக கிடைத்து. கூறுகிறார்கள். அறிவுறுத்தலுக்குப் பிறகு அந்த அத்ஃபால்கள் தன்னுடைய பாக்கெட் செலவிலிருந்து 11 டாலர்களை மேலும் வைத்து 100 டாலராக ஆக்கி உடனடியாக தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் கொடுத்து விட்டார்கள். அதிகமான சம்பவங்களிலிருந்து ஒரு சில சம்பவங்களை மட்டுமே நான் கூறியுள்ளேன். பழைய அஹ்மதிகள் மட்டும் தியாகங்கள் செய்வதில்லை. மாறாக, புதிய அஹ்மதிகளும் நான் கூறியது போன்று ஆப்ரிக்காவிலும், ஐரோப்பாவிலும், குழந்தைகளும், பெண்களும் வியக்கத்தக்க விதத்தில் தியாங்கள் செய்கின்றனர்.

எனவே, சந்தா ஆமிற்கு நிச்சயமாக முன்னுரிமை உள்ளது. ஒவ்வொரு சம்பாதிக்கக்கூடியவரும் இது கொடுக்க வேண்டும். அதன் பிறகு வசதிக்கேற்ப தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாக்களை கொடுங்கள். நாம் அனைவரும் அறிந்தவாறு தஹ்ரீகே ஜதீதினுடைய ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து ஆரம்பமாகின்றது. இப்போது நான் கடந்த வருடத்தினுடைய அறிக்கையையும் புதிய வருடத்தினுடைய அறிவிப்பையையும் செய்வேன். 31 அக்டோபர் 2014 அன்று முடிவடைந்தது தஹ்ரீகே ஜதீதின் 80 வது ஆண்டாகும். அறிக்கையின் அடிப்படையில் 84,70,800 பவுண்ட் ஜமாஅத் பொருள் தியாகம் செய்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ். இந்த வசூல் கடந்த ஆண்டை விட 6,01,000 பவுண்ட் அதிகமாகும். மேலும் பாகிஸ்தான் தன்னுடைய கடுமையான நிலை இருந்தும் இந்த வருடம் முதல் இடத்திலேயே உள்ளது. பாகிஸ்தான் தவிர வெளி பத்து ஜமாஅத்துகள் ஜெர்மனி முதல் இடத்தில் உள்ளது. லண்டன் இடண்டாவது இடத்திலும், கடந்த ஆண்டு யூ,கே மூன்றாவது இடத்தில் உள்ளது. தற்போது இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளார்கள். அமெரிக்கா மூன்றாவது இடத்திலும், கனடா நான்காவது இடத்திலும், இந்தியா ஐந்தாவது இடத்திலும், ஆஸ்திரேலியா ஆறாவது இடத்திலும், இந்டோனேஷயா ஏழாவது இடத்திலும், ஆஸ்திரேலியாவும் ஒரு இடம் முன்னேறியுள்ளது. இன்டோனேஷயா பின் சென்றுவிட்டது. இது தவிர இரு மத்திய கிழக்கு நாடுகளின் ஜமாஅத்துகள், பிறகு சுவிட்சர்லாந்து, கானா, நைஜீரியா போன்றவைகளாகும். உள்ளூர் கரண்ஸியின் அடிப்படையில் வசூலில் முதல் பத்து இடங்களிலுள்ள ஜமாஅத்துகளில் கானா முதல் இடத்தில் உள்ளது. ஏறக்குறைய 50 சதவிகிதம் அவர்கள் அதிகமாக்கியுள்ளார்கள். ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்தில் உள்ளது. அவர்கள் 44 சதவிகிதம். பிறகு மத்திய கிழக்கு நாடுகள் 14 சதவிகிதமும், சுவிட்சர்லாந்து ஏறக்குறைய 15 சதவிகிதமும், பாகிஸ்தான் 14 சதவிகிதமும், யூ.கே 13.5 சதவிகிதமும், பிறகு இந்தோனேஷியா உள்ளது. பிறகு இந்தியா மற்றும் ஜெர்மனி சம நிலையில் உள்ளன. கனடா இந்த பத்து ஜமாஅத்துகளில் கடைசி இடத்தில் உள்ளது.

தனி நபர் கொடுத்தலின் அடிப்படையில் அமெரிக்க முதல் இடத்தில் உள்ளது. சுவிட்சர்லாந்து இரண்டாவது இடத்திலும், ஆஸ்திரேலியா மூன்றாவது இடத்திலும் உள்ளது. கடந்த சில வருடங்களிலிருந்து அதவாது இரண்டு, மூன்று வருடங்களாக தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீதில் எண்ணிக்கை அதிகமாக வேண்டும். தொகை அதிகமாகிறாதா ? இல்லையா ? என்று பார்க்க வேண்டும். தூயவர்களின் எண்ணிக்கை அதிகமாக வேண்டும் என்று நான் கவனமூட்டி

வருகின்றேன். அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் இதன் மொத்த எண்ணிக்கை 12,11,700 ஆகிவிட்டது. மேலும் கடந்த நான்கு வருடங்களில் ஏறக்குறைய 6,00,000 அதிகமாகி உள்ளது. இதில் புதிதாக இணைந்துள்ளனர். அல்லாஹ்வின் அருளால் அலுவலகத்தின் அறிக்கையின் அடிப்படையில் 5,927 பேரின் தஃவ்தர் அவ்வல் கணக்குகள் இதில் உள்ளன. இதில் 105 பேர் அல்லாஹ்வின் அருளால் உயிருடன் உள்ளனர். மீதி 5,822 கணக்குகள் மரணித்தவர்களின் வாரிசுகளோ அல்லது பிற ஜமாஅத்தின் தூயவர்களோ தொடங்கி உள்ளனர். இந்தியாவிலுள்ள முதல் பத்து மாநிலங்களில் முதல் இடத்தில் கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திர பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ஒரிசா, மேற்கு வங்காளம், பஞ்சாப், தில்லி, லக்ஷதீப். முதல் பத்து ஜமாஅத்துகளில் கருளாயி முதல் இடத்திலும், காலிகட் இடண்டாவது இடத்திலும், பிறகு ஹைதராபாத், பிறகு காதியான், பிறகு கன்னூர் டவுன், பைங்காடி, சூலூர், கொல்கத்தா, சென்னை, பெங்களூரு போன்றவை. அல்லாஹ் இவர்கள் அனைவரின் பொருள் தியாகத்தினை ஏற்றுக் கொள்வானாக. இவர்களின் பொருளிலும், உயிரிலும் அளவற்ற அருள் செய்வானாக. மேலும் இந்த செல்வங்களை சரியான முறையில் செலவிடுவதற்கான நல்வாய்ப்பினை ஜமாஅத் அமைப்பிற்கும் வழங்குவானாக.

தொழுகைகளுக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். அது கானவைச் சார்ந்த நமது உள்ளூர் முஅல்லிம் மற்றும் முபல்லிக் மதிப்பிற்குரிய அல்ஹாஜ் யூசுஃப் அட்டுசயி சாஹிப் அவர்களுடையதாகும். நவம்பர் 2 அன்று இரவு 11.45 க்கு குமாசியில் இறைநியதிக்கேற்ப வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 15 டிசம்பர் 1942 ஒரு கிறித்தவ குடும்பத்தில் பிறந்தார்கள். 16 வது வயதில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பு கிடைத்தது. 20 வயதில் கானாவின் ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனில் கல்வியை முழுமை செய்தார்கள். ஹுஸூர் அவர்கள் இவர்களுடைய புகழுக்குரிய நல்லொழுக்கங்கள் மற்றும் தொண்டுகளைப் பற்றி அழகான முறையில் கூறினார்கள். மேலும் மர்ஹூமுடைய ஆன்மீக பதவி உயர்விற்காகவும் மேலும் அவர்களுடைய சந்ததிகளும் தூய்மை மற்றும் விசுவாசத்தில் முன்னேறிச் செல்வதற்காக துஆ செய்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh, London – on 7.11.14
Summarized by Majlis Ansarullah Bharat
Tamil Translation : Moulavi. M.B. Tahir Ahmad
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516